திருவள்ளுவராண்டு 2054
2024 நவம்பர், திசம்பர், சனவரி – காலாண்டிதழ்
மலர்–7 இதழ்–23

# உலகத்தமிழ்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

E-ISSN : 2581 - 9712

வெளியீடு
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத்தமிழ் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்


## ஆசிரியர் குழு

### தலைமை ஆசிரியர்

முனைவர் **அவ்வை அருள்**
இயக்குநர்(பொ),
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
தொலைபேசி: 0452-2530766
நிகரி: 0452-2530799
மின்னஞ்சல்: director@utsmdu.org

### ஆசிரியர் குழு (இந்தியா)

முனைவர் **வி.திருவள்ளுவன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: tamilunivc@gmail.com

**திரு.கோபிநாத் ஸ்டாலின்**
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: iits@tn.nic.in

முனைவர் **கோ.பிலவேந்திரன்**
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drarangapari@gmail.com

முனைவர் **வை.இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drramarajapandian@gmail.com

முனைவர் **தி.உமா**
பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும்
இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007
மின்னஞ்சல்: dumadevi@gmail.du.ac.in / umadchitra@gmail.com

### ஆசிரியர் குழு (அயலகம்)

திரு **ம.ஜெயராமசர்மா**
விக்டோரியா இந்துக் கல்வி மையத்தின் ஆலோசகர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
"தடாகம்" தமிழ் இலக்கிய வட்டத்தின் பண்பாட்டு
இலக்கிய ஆலோசகர், ஆசுதிரேலியா.
மின்னஞ்சல்: jeyaramiyer@yahoo.com.au

முனைவர் **சி.இளங்குமரன்**
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு,
தற்கால மொழிகள் துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
மின்னஞ்சல்: s.lingkumaran@gmail.com

முனைவர் **இர.பிரபாகரன்**
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச்சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
மின்னஞ்சல்: prabu0111@gmail.com

முனைவர் **வி.ஜீவகுமாரன்**
அரச நூலகத்தில் தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளர்,
ஆலோசகர், நகரசபையின் புவியியல் சார்ந்த
தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர், டென்மார்க்.
மின்னஞ்சல்: jeevakumaran5@gmail.com

முனைவர் **ஆ.ரா.சிவகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப்
பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
மின்னஞ்சல்: sivakumaran.r@nie.edu.sg

## செய்தி ஆசிரியர்

முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை



## தொடர்புக்கு

0452 - 2530766 / 2530799
utsmdu2@gmail.com
Uts Mdu
@TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## முகவரி

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை,
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை - 625020




# உலகத்தமிழ்

## காலாண்டிதழ்

# உள்ளே


| வ. எண் | தலைப்பு | பெயர் | பக் |
|---|---|---|---|
| 1. | ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடும் மன்பேராய நோக்கும் | பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி | 04 |
| 2. | ஐங்குறுநூற்றில் உளவியல் | முனைவர் ந. தமிழ்மொழி | 16 |
| 3. | செம்மொழி இலக்கியங்களில் அமைதியும் நல்லிணக்கமும் | முனைவர் இரா.சிங்கராஜா | 27 |
| 4. | மலேசியத் தமிழ் நாவலின் கருப்பொருள் வகையாக்கமும் தமிழாசிரியர்களின் ஈடுபாடும் – ஓர் ஆய்வு | சீனிவாசன் சந்திரன் | 34 |
| 5. | தமிழ்கூறும் 'மதுரைகள்' | முனைவர் பி. ஆறுமுகம் | 39 |
| 6. | கம்பராமாயணத்தில் தானங்கள் | முனைவர் க.மங்கையர்க்கரசி | 47 |
| 7. | அவ்வை நிர்மலாவின் 'மந்தாரை' கவிதைத் தொகுதிகளில் காணலாகும் இயற்கை சிந்தனைகள் | வை.நித்தியா | 55 |
| 8. | ஒலி அடங்கிப் பேசும் அகப்பாத்திரங்கள் | ச.கண்மணிகணேசன்(ஓய்வு) | 62 |
| 9. | கறுப்பர் விடுதலையில் : ஆளுமைகளும் அரசியல் இயக்கங்களும் | ஊ. முத்துப்பாண்டி | 71 |
| 10. | கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும் | ச.வாசுதேவன் | 83 |
| 11. | சூழலியல் நோக்கில் நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்கள் | வி.ஜெயபிரியா | 89 |
| 12. | சே.இராமானுஜம் நாடகங்களில் விளிம்புநிலை மக்கள் | க.சிவஞானசம்மந்தம் | 95 |
| 13. | தமிழ் இலக்கியங்களில் பாண்டிய நாட்டுச் சித்திர மாடங்கள் | முனைவர் கு.கனிமணி | 102 |
| 14. | திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கையாளும் எண்ணுப்பெயர்கள் | திருமதி ஜே.எஸ். ஊர்மிளா | 107 |
| 15. | திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்கள் | முனைவர் மு.ரா.மஜிதா பர்வின் | 116 |
| 16. | நைஜீரியர்களின் வருகையும் கலாச்சார நெருக்கடியும் - 'நைரா' நாவலை முன்வைத்து | மு.காயத்ரி | 121 |
| 17. | ஃபெப்ரீசியஸின் தமிழ் இலக்கண எழுதியல் | முனைவர் ச. முருகேசன் | 128 |

# சே.இராமானுஜம் நாடகங்களில் விளிம்புநிலை மக்கள்



**க.சிவஞானசம்மந்தம்**
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
(Ref.No:05944),
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி),
கும்பகோணம் - 612002.
மின்னஞ்சல் : manalagaramghs@yahoo.com

**ஆய்வுச்சுருக்கம்**

பேராசிரியர் சே.இராமானுஜம் தம் நவின நாடகம் இயற்றியிருப்பினும் விளிம்புநிலை மக்களின் நிலைப்பாடுகளை எண்ணற்று எடுத்துரைத்துள்ளார். அவற்றுள் கலை, இலக்கியம், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் அறிவார்ந்த செழுமையின் தொகுதியே ஒரு சமுதாயத்தின் பண்பாடு எனலாம். தற்போது தலித்தியம் பற்றியும் தலித்துகளும் தலித் அல்லாதவர்களும் தற்காலத்தில் நவின இலக்கியத்திற்கு ஏற்றாற்போல் நாடகத்தை இயற்றியுள்ளார்கள். பழங்காலத்தில் பல்வேறு இனக் குலப்பிரிவினைகளாக வைசியர், வேளாளர், தச்சர், கொல்லர், ஐயர் என்று தொழில் சார்ந்தே வழங்கப்பட்டன. அப்பொழுது அனைத்து இனங்களும் ஈடாகவே கருதப்பட்டன. காலப்போக்கில் அறிவியலும் வளர்ச்சி அடைந்தன. மேலும், மனிதனுக்குள்ளே பணம், வசதி வந்ததும் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற எண்ணம் தொடங்கத் தொடங்கியது. பலர் தலித் என்பதற்கு உடைக்கப்பட்டவர், நொறுக்கப்பட்டவர், பழிக்கப்பட்டவர், முகம் கிழிந்தவர், சிதறடிக்கப்பட்டவர், அடையாள மற்றவர், முகவரி இழந்தவர், பெயரில்லாதவர் என்று பொருள்படுகிறது. விளிம்புநிலை மக்கள் என்பவர்களைப் பன்முகத்தன்மை கொண்டவராக அறியப்படுகிறது.

**முன்னுரை**

பேராசிரியர் சே.இராமானுஜம் நவின நாடகத்தில் மக்களின் துன்பநிலை, அடித்தட்டு மக்களின் பழக்க வழக்கம், பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம் தம் நாடகத்தின்

மூலம் விளிம்புநிலை மக்களின் நிலையை எடுத்துக்காட்டியுள்ளார். இவர் தமிழ், மலையாள நாடக அரங்கிற்குத் தனது எழுத்து, பேச்சு, இயக்கம், பயிலரங்கம் மூலம் பங்களிப்பைச் செய்தவர். இவர் எழுதிய நாடகங்கள் பதினெழு, இலக்கியத் தமிழ் நாடகங்கள் முப்பத்து மூன்று, மலையாள நாடகம் இருபத்தி எட்டு, ஆங்கில நாடகம் ஆறு, இந்தி நாடகம் இரண்டு என எண்ணற்ற நாடகம் இயற்றியிருப்பினும் விளிம்புநிலை மக்களின் நிலைபற்றிய நாடகமாக மௌக்குறம், செம்பவளக்காளி, முகப்போலி போன்ற நாடகத்தில் உள்ள கருத்துகளை ஆராயப்பட உள்ளது.

**விளிம்பு நிலை மக்களும் வன்கொடுமைகளும்**

இனமும் வர்க்கமும் தோன்றிய காலம் முதல் தற்காலம் வரை மிருகங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மரியாதையும் மனித நேயமும் இந்த மண்ணில் வாழும் மக்களுக்குத் தீட்டு ஏற்படுத்துகின்ற தொழிலைச் செய்து காக்கின்ற புறச்சாதியினராக தலித்துகள் மீது இந்தச் சமூகம் வைப்பதில்லை. தலித்துகள் இனம் ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சுரண்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வருகின்றனர். தலித் மக்கள் பல்வேறு காரணங்களுக்காக இன்னல்களும், உயிர் இழப்பும், கற்பு இழப்பும் சமூக அவலமாக அமைகின்றன. இத்தகைய வன்கொடுமைகளுக்கு அடிப்படையாக அமைவது இனம் என்னும் கொடுங்கருவியாகும். இச்சாதி குறித்துப் பாம்பாட்டிச் சித்தர்,

**“சாதிப்பிவினிலே தீவை முட்டுவோம்**
**சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்**
**வீதிப் பிரிவினிலே விடையாடிடுவோம்”**[1]

எனக் கூறி, இனம் என்பது மிகக்கொடிய சக்தி. அது சமூகத்தின் ஆணிவேரையே அசைத்துவிடும் எனவே அதனை விட்டொழிக்க வேண்டும் என்கிறார். அத்துடன் பழங்காலத்தில் ஏற்றத்தாழ்வு, ஆண், பெண் வேறுபாடு அனைவரும் சரிசமம் கிடையாது என்பதனை இருந்துள்ளது. இதனை உணர்த்தும் வண்ணம் அனைவரும் ஈடாக இருத்தல் வேண்டும் என்பதற்காகக் கணியன் பூங்குன்றார்,

**“யாதும் ஊரே யாவரும் கேளீர்**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா”**[2]

எனத் தொடரும் புறநானூறுப் பாடலிலும்,

**“பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”**[3]

எனும் அடிகள் தமிழர்கள் வாழும் நிலம் முழுவதும் ஓர் இனமாக வாழ வேண்டும். வேறுபாடுகளை வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறார்.

மௌனக்குறம் ஆண், பெண் சங்ககாலத்து அகவன் மகளிலிருந்து இன்றைய குறவஞ்சி நாட்டியம் வரை நாயகப் பாங்கான குறத்தி பிம்பம் காலங்காலமாகத் தமிழ் மண்ணில் கலந்து நிற்பதாகும். இயற்கையோடு இணைந்தும் உறவு கொண்டு மனிதத்தின் சமத்துவமான பாடல் உணர்வு சிதறாமல் நிற்பது குறவாழ்வின் அம்சமாகும். ஆண், பெண் உறவின் பாலுணர்வுப் பரிவர்த்தனை சமமாகப் புலப்படுத்திக் கொள்ளும் பாங்கு அவ்வாழ்வின் இயல்பாகும்.

**ஆண்**

நாடகத்தில் உரையாடும்போது "இந்தப் பொம்பளங்க சமாச்சாரம் தெரியாதா! உச்சாணி கொம்புல தூக்கி விடறதும் அவங்கள் தான் ஒரேடியா ஆலமர அடிமரத்து வேருல போட்டு உடைக்கிறத்தும் ஆவதும் பெண்ணால நாடு அழிவதும் பெண்ணால தானே என்றும் பொறந்ததிலிருந்து பொனமாகிற வரைக்கும் பெண்களுக்குச் சீர்வரிசை கொடுத்தே போண்டி ஆகிற நிலைமைதான் இன்றைக்கு" என்பதை,

**"கல்யாண மேடையை**
**ஒப்பனை செய்வதற்காகக்**
**கனவுகள் கண்ட**
**கன்னிப் பூக்கள்**
**சவப்பெட்டியின் மேனியில்**
**சரிந்து விழுந்தன"**[4]

தொடக்கக் காலக்கட்டத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை அற்றவர்களாக இருப்பதனால் ஆண்கள் வரதட்சணை, குடும்ப வன்கொடுமை போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். வரதட்சணை பெண்ணின் உயிரையும் குடும்பத்தின் உயிரையும் போக்கும் அளவிற்குச் சொல்கிறது. இதனைக் கவிஞர் மு.மேத்தா எடுத்துரைத்துள்ளார்.

**பெண்**

உரையாடுகிறாள் ஒரே அடியாய்ப் பெண்களை இழிவுபடுத்தாதீர்கள். ஆனானப்பட்ட முப்பெரும் கடவுளர் செஞ்ச செயல் தெரியுமா உங்களுக்கு அனுசுயா தேவிகிட்ட ஆம்பள புத்தியக் காட்டிடாங்க அம்பனமா உணவு பரிமாறனும்னு கேட்ட

உடனே அவங்களக் குழந்தைகளாக்கிப் பாலூட்டினாள். தன்னிகரில்லாத தாய் உணர்வுக்கு ஈடுண்டோ எனக் கேட்டாள்.

**“உன்னைப் பெற்றவளும் பெண்தானே – சீராட்டி**

**வளர்த்தவளும் பெண்தானே”[5]**

எனக் கேட்டாள். இதனைப் புதுமை பெண்களுக்கு விழிப்புணர்வாகப் பாரதியார்,

**“நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**

**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**

**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**

**செம்மை மாதர் திரும்புவ தில்லை”[6]**

இதன் மூலம் ஆண், பெண் சமத்துவம் போன்ற சமூகத்தில் மலரும் வேலை பிரினை பாகுபாடுகள் மறையும்.

**குறவன் குறத்தி**

குறவன் தன் குறத்தியைத் தேடி நகர் வளத்திற்கு வருகிறான். வரும்போதே தன் சிங்கி ஒரு நாளும் தன்னை விட்டுப் பிரிந்தது கிடையது என்று புலம்பியபடியே நகர்ப்புறத்தில் உள்ள மக்களிடம் கேட்டுக்கொண்டே ரேஷன்கடை, ரயில்வே ஸ்டேஷன், சினிமாக்கொட்டா, காடெல்லா தேடிப்பார்த்து வருகின்றான். இவர் மலைவாழ் மக்கள் என்றும் குறவன் மலைத்தேன் எடுப்பவனாகவும், குறத்தி குறி சொல்பவள், வேட்டையாடி உணவு அருந்துபவர்களாகவும், விலங்குகளிடம் காத்துக்கொள்ள வாயில்கள் குறுகியவாய் அமைத்துப்பார்க்கல் என்றும் ஊரில் உள்ள மக்கள் குறவனைப் பார்த்து ஏளனம் செய்கிறார்கள்.

**“கட்டியம் - ஏய்யா! உன் சிங்கி என்ன.... செத்தா போயிட்டா?**

**ஒப்பாரி வைக்கிறியே! போய்யா”[7]**

எனத் தேடிப்பாரு எனச் சொன்னார்கள்.

**“குருவி வேய்ந்த குறுங்காற் குரம்பை”[8]**

இதனை, சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப்பாட்டில் குறவன் குறத்தி வாழ்வைப் பற்றி எடுத்துரைக்கிறது.

**செம்பவளக்காளி – பவளவல்லி**

பவளவல்லி பரத்தையாகக் காட்சி அளிக்கிறாள். பவளவல்லிக்கு திருமணம் நடக்க அன்று இரவே அந்நாட்டின் சேனைத் தலைவன் பவளவல்லி வீட்டிற்கு வர மன்னன் தம்மை அழைத்துவரச் சொல்லிக் கட்டளை இட்டுள்ளார். ஆனால் பவள

வல்லியோ கற்புநெறி காத்து நிற்றல் காவலர் தம் கடமை அல்லவா என்றுகூற சேனைத் தலைவன், அதனை மறுத்துப் பவளவல்லியை மன்னன் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்கிறான். மன்னன் பவளவல்லியை அடைய நினைக்கிறான். சோர்ந்த பவளவல்லி துடிப்புகளையும் வலுவையும் சேர்த்துக் கொண்டு கூச்சலிடுகிறாள். கையில் கிடைத்த கருவியால் தன்னை மாய்த்துக் கொள்கிறாள். அவை,

**“பாவையவள் தன்னுயிரை**
**மாய்த்துக் கொண்டாள்**
**சுயமான அறநெறிக்கோர்**
**உயிரைத் தந்தாள்”**[9]

பவளவல்லி நினைத்திருந்தால் மன்னரின் சுக வாழ்வுக்கும் பொருளுக்கும் விரும்பி வாழ்ந்திருக்கலாம். ஆனால் அப்படி இல்லாமல் புதுப்பெண்ணாக உருவெடுத்தால். இதனையே பாரதிதான்,

**“ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர்**
**தேடுவதும், ஆடவர்க்குச் சேவி திரும்பதுவும்**
**அஞ்சுவதும் நானுவதும் ஆமையைப் போல் வாழ்வதும்**
**கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்**
**மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி”**[10]

புதுமைப் பெண்ணானவள் பெண்ணுக்குரிய, பொருள்களின் மீது அதிக நாட்டமின்மை, அடிமைப் பண்பு இல்லாமை, அஞ்சாமை, நாணாமை, அடங்கி ஒடுங்கி வாழாமை, கெஞ்சாமை ஆகிய பண்பு நலன்களோ திகழ்தல் சாலச்சிறந்தது என்று அறிவுறுத்தியுள்ளார்.

**முகப்போலிகள் மருமகள் - மாமனார்**

இந்நாடகம் ஓரங்க நாடகம் ஆகும். உலகத்தில் உண்மையான முகத்தைப் பார்க்க முடியவில்லை. காரணம் அனைத்திற்கும் சுயநலம் இதில் கணவன், தன் மனைவி, தந்தை, தாய், ஊரில் உள்ளவர்களிடமும் தன்னிடம் பணியாற்றுபவர்களிடம் உண்மையான முகத்தோடும், குணத்திலும் இல்லாமல் இருக்கிறான். அதனை, மனைவி எடுத்துரைக்கிறாள். நிமிடத்திற்கு நிமிடம் முகத்தை மாற்றுவது நல்லது கிடையாது. அனைவரிடமும் உண்மையாக நடந்து கொள்ளுங்கள் என்று எடுத்துரைக்கிறாள். ஆனால் கேட்க மறுக்கிறான். தன் மாமனாரிடம் உங்கள் பிள்ளை உண்மையான முகத்தோடு பழக மாட்டகிறார்கள், போலியான முகத்தோடு உள்ளார்

எனக் கூறுகிறாள். ஆனால், 'மாமனாரோ என் பிள்ளையை உள் வசமாக்கப் பார்க்கிறாய்' எனக் கூறுகிறான். இறுதியில் உண்மையான முகத்தோடு மாறுகிறான்.

**கணவன்**

எவரிடத்திலும் உண்மையாக இல்லாமல் முகப்போலி அணிந்து கொண்டு வாழ்கிறான். மனைவியும் கேட்டாள் காரணம் நான் அடிக்கடி வெளி உலகோடு தொடர்பு கொண்டிருப்பதனாலும் அங்கே எனக்கு மதிப்பு, பெருமை, வாழ்த்து, வசதி எல்லாம் உண்டு. மற்றவர்களிடம் பல்லைக் கடிக்கவும், பல்லிளிக்கவும், பாராட்டவும், பாராட்டப்படவும், அதிகாரம் செய்யவும், முறைத்துக்கொள்ளவும் மற்றவர்களை முட்டாளாக்கவும் பல நிலைகள் சந்திக்க வேண்டியுள்ளது என்கிறான். ஆனால் பல நிலைகள் சந்திக்க வேண்டியுள்ளது என்கிறான். ஆனால் மனைவியே இது நிரந்தர வாழ்க்கை கிடையாது. அனைவரிடம் உண்மையாக இருங்கள். தம்மிடம் வசதி வாய்ப்புகள் இருக்கிறது என்ற மற்றவர்களை இழிவுபடுத்தாதீர்கள் என்கிறாள். இதனையே நிலையற்றது என்று பாம்பாட்டிச் சித்தர் எடுத்துரைத்துள்ளார்.

**'நாடு நகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்**
**நடுவன் வரும்போது நாடி வருமோ**
**கூடுபோன பின்பு அவற்றால் கொள்பயன் என்னோ?**
**கூத்தன் பதங்குறித்து நின்று ஆடாய்ப் பாம்பே"**[11]

மாட மாளிகைகளும், கூடக் கோபுரங்களும், வண்ண மண்டபம் மதில் கூற்றிய அரண்மனை மற்றும் செல்வங்கள் எல்லாம் நம் கூடவே வருவது இல்லை.

**தொகுப்புரை**

மலைகளிலும் காடுகளிலும் பூர்வக் குடிமக்களை அழித்துப் பெருங்கலாச்சாரங்கள் பரவலாக்கப்படும். பூர்வீ குடிமக்கள் அடிமையாக்கப்பட்டு வேறு கலாச்சாரத்தின் கீழ் நசுக்கப்படுவதும் உலக வரலாற்றை உருவாக்கிய வன்முறை ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றில் நிலம் பறிக்கப்படுவதும் உண்டு. கலாச்சாரமும், நம்பிக்கைகளும் பறிக்கப்படுவது ஒன்றாகவே நடந்து வருகிறது. நவீன நாடகங்கள் குறித்த செய்திகளை வெகுசன மக்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் நாடகக்காரர்கள் நாடக விழாக்களை நடத்தி வருகின்றனர். நவின நாடகத்தில் சடங்குகளும், சம்பிரதாயங்களும் பெண்ணை அடிமைத்தனத்தையும் உடைத்தலை முன் வைத்தே விழிப்புணர்வு கொண்டுவரும் வகையில் நாடகம்

பிரதிபலித்தல் வேண்டும். அதன் முன் வைத்தே சே. இராமானுஜம் இயற்றிய மௌக்குறம், செம்பவளக்காரி, முகப்போலி மக்களுக்கு விழிப்புணர்ச்சி உண்டாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. பாம்பாட்டிச் சித்தர் (தொ.ஆ), சித்தர் பாடல்கள், ப.123.
2. கணியன் பூங்குன்றனார் – புறநானூறு – பா.192, ப.464.
3. மேலது, ப.465.
4. மூ.மேத்தா, கண்ணிர்பூக்கள், ப.39.
5. சே.இராமானுஜம், மௌக்குறம், ப.314.
6. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.544.
7. சே.இராமானுஜம் மௌனக்குறம், ப.320.
8. சா.வே.சுப்ரமணியன், சங்க இலக்கியம், குறிஞ்சி, ப.153.
9. சே.இராமானுஜம், செம்பவளக்காளி, ப.308.
10. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.39.
11. ஞா.மாணிக்கவாசகன், மணிமேகலை பாடல், ப.40.

# சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தழைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானே...!

– உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

E-ISSN : 2581 - 9712